RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2324

# Challenges faced by quazi court and its resolutions in Contemporary Sri Lanka

## சமகாலத்தில் இலங்கையின் காதி நீதிமன்றம் எதிர்கொள்கின்ற சவால்களும் அதற்கான தீர்வுகளும்

**T. Mohamed Mufas [a], C. Sivanayagam [a, *]**

[a] Department of Social Sciences, Eastern University, Vantharumoolai, Eastern Province, Sri Lanka

*Corresponding author Email: sivanayagamc@esn.ac.lk

DOI: https://doi.org/10.54392/ijmrd2324

Received: 23-02-2023; Revised: 23-05-2023; Accepted: 01-06-2023; Published: 30-06-2023

**Abstract:** Sri Lanka is a multi-ethnic country. There are various traditional legal systems still practiced in the country. Hence the Muslim personal law is one of them. There are several criticisms against the Muslim personal law. Because of all the criticisms, it is prioritized that Muslim divorce cases are to be handled under the common law than the Quazi court. Quazi courts are criticized for its partial and discriminatory treatment of Muslim women in dealing with marriage issues. This study found that Quazi court has its own judiciary practices which are not conducive to protect women and instead, violating the rights of women in handling the divorce cases. This study identifies the challenges faced by the women dealing the divorce cases in this court. This study proposes recommendations to make obsolete the Quazi court in dealing with divorce cases in order to safeguard the democratic rights of the Muslim women. This study is based on Nintavur regional Quazi court. Primary information were collected through Observation and interviews and secondary information were collected from Books, journals, websites and the records from Quazi courts.

**Keywords:** Muslim personal law, Quazi court, Muslim women, Quazi judge

**Language: Tamil**

## முன்னுரை

இலங்கையானது பன்மையியல் சமூக அமைப்பினைக் கொண்டு நாடாகும். இச்சமூக அமைப்பினை அடிப்படையாகக் வைத்து இங்கு பல்வேறு சட்ட முறைமைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இலங்கையின் பொதுச் சட்டமானது இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். பொதுச் சட்டத்திற்கு இணையாக வேறு சட்டங்களும் இலங்கையில் காணப்படுகின்றன. அவை கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முக்குவர் சட்டம் மற்றும் முஸ்லிம் தனியார் சட்டம் போன்றன (Mark Cooray, 2003). கண்டியச் சிங்களவர்கள் கண்டியச்சட்டம் மூலமும், யாழ்ப்பாணத் தமிழர்கள் தேசவழமைச் சட்டம் மூலமும் இஸ்லாமிய நம்பிக்கையைப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம் தனியார் சட்டம் மூலமும் ஆளப்படுகின்றனர். குடியியல், குற்றவியல் விடயங்களில் எல்லோரும் எவ்வித வேறுபாடுகளுமின்றி பொதுச் சட்டத்தினாலேயே ஆளப்படுகின்றனர் (Mazahir et al., 2017).

ஆயினும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சவுதி அரேபியா, இந்தோனேஷியா, சிரியா, மலேசியா போன்ற நாடுகளில் பொதுவாக இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலேயே குடியியல் மற்றும் குற்றவியல் விடயங்கள் செயற்படுத்தப்படுகின்றன (Mazahir et al., 2017). ஆனால் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இந்தியா, இலங்கை போன்ற ஒரு சில நாடுகளில் இஸ்லாமிய சட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இருந்தும் இலங்கை வாழ் முஸ்லிங்களுக்கென முஸ்லிம் தனியார் சட்டமும் காணப்படுகின்றது. இச்சட்டமானது இலங்கை முஸ்லிம்களின் விவாக, விவாகரத்து முஸ்லிம் வாரிசுரிமை, மற்றும் பள்ளிவாசல்கள், வக்ப் - தர்ம நம்பிக்கை பொறுப்பு

போன்ற விடயங்களில் மாத்திரமே சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு காணப்படுகின்றன. அதிலும் திருமணம், மண நீக்கச்சட்டம் மாத்திரமே பொதுச்சட்டத்தின் தலையீடின்றி முழுமையாக நடைமுறையிலுள்ளது (Mazahir et al., 2017). இந்த அடிப்படையிலேயே முஸ்லிம்களின் திருமணம், மண நீக்கம் தொடர்பான விடயங்களை கையாள்வதற்காக ஆரம்ப நீதிமன்றமாக 'காதி' நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமாக காதிகள் சபையும் நிறுவப்படல் வேண்டும் என விதந்துரைக்கப்பட்டது. அதற்கிணங்க, 1929ம் ஆண்டின் 27ம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் உருவாக்கப்பட்டு (Jazeel & Fowzul, 2018). இவற்றை அடிப்படையாகக் கொண்டு "காதி நீதிமன்றங்கள்" என்ற நிறுவன ரீதியான அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு உரித்தான காதி நீதிமன்றங்கள் செயற்படுத்துகின்ற செயற்பாடுகள் தொடர்பாக அண்மைக்காலமாக பல்வேறு மட்டங்களில் பல வாதப்பிரதிவாதங்கள் தற்போது வரையில் தேசிய ரீதியில் நடைபெற்று இடம்பெற்று வருகின்றன. இதன் மூலம் இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல்வேறு வகையான அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றமை அவதானிக்க முடிகின்றது. கடந்த பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இலங்கையில் "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற தலைப்பில் காதி நீதிமன்றத்தில் பல சீர்திருத்தங்கள் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் அதற்காக ஜனாதிபதி செயலணியொன்றும் அமைக்கப்பட்டது. இச்செயலணியின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு காதி நீதிமன்றத்தில் மாற்றங்களை கொண்டு வர முயற்சிக்கப்பட்டன. ஆயினும் கடந்த காலத்தில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி அதனோடு இணைந்த ஆட்சி மாற்றமானது அத்திட்டத்தினை முன்னெடுக்க முடியாவிட்டாலும் பொதுவாக காதி நீதிமன்றத்தின் மீது முன்வைக்கப்படுகின்ற பிரதானமான குற்றச்சாட்டுகள் களையப்பட வேண்டியவையாகும். அந்தவகையில் இந்நீதிமன்றம் முஸ்லிம் பெண்களுக்கு பல வகையில் அநீதி இழைக்கின்ற ஒரு நிறுவன அமைப்பாக சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே இவ்வாறு காதி நீதிமன்றம் கையாள்கின்ற செயற்பாடுகளான திருமணம், மண நீக்கம், திருமண சட்ட ஒழுங்குகள், வரையறைகள் என்பவற்றினை இந்நீதிமன்றம் எவ்வாறு செயற்படுத்துகின்றது, அவ்வாறு செயற்படுத்தும் போது அண்மைக்காலத்தில் முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் எவை என்பதனையும் அறிந்து கொண்டு அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வு வினாக்களும்

இலங்கையில் காதி நீதிமன்றத்தின் செயற்பாடுகளினால் முஸ்லிம் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றமை குறித்து எழுந்துள்ள பாரிய நெருக்கடிகள் ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது காதி நீதிமன்றத்தின் செயற்பாடுகள் எனும் போது திருமண வயது, காதி நீதிபதிகளின் தகைமை, பெண்கள் கையொப்பம், பெண் காதி நீதிபதிகள், பதிவு முறைகள் மற்றும் விவாகரத்தின் போதான தீர்ப்புக்களால் பெண்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

1. காதி நீதிமன்றம் எவ்வாறான சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது?
2. அண்மைக் காலத்தில் காதி நீதிமன்றங்கள் எதிர் நோக்கும் சவால்கள் எவை?
3. காதி நீதிமன்றத்தினால் முஸ்லிம் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் எவை?
4. காதி நீதிமன்றத்தில் முஸ்லிம் பெண்களில் திருமண உரிமை, சமத்துவம் எந்தளவு காணப்படுகின்றது?
5. காதி நீதிமன்றத்தின் வகிபாகம் எத்தகையது?

## ஆய்வு நோக்கங்கள்

1. காதி நீதிமன்றம் எத்தகைய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது என்பது தொடர்பாக அறிதல்
2. சமகாலத்தில் காதி நீதிமன்றங்கள் எதிர் நோக்கும் சவால்களை வெளிக்கொண்டு வருதல்,
3. காதி நீதிமன்றத்தினால் முஸ்லிம் பெண்கள் எவ்வாறான பிரச்சினைக்கு உள்ளாகின்றனர் என்பதை கண்டறிதல்,

4. காதி நீதிமன்றத்தில் முஸ்லிம் பெண்கள் அனுபவிக்கும் திருமண உரிமை, சமத்துவத்தின் நிலையினை கண்டறிதல்,
5. காதி நீதிமன்றத்தின் வகிபாகத்தினை கண்டறிதல்,

## ஆய்வு முறையியல்

ஒரு ஆய்வுக்கு அவசியமாக அமைவது ஆய்வு முறையியலாகும். அத்தோடு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் இன்றியமையாதவையாகும். இத் தரவுகளே ஆய்வின் நம்பகத்தன்மை, உறுதிப்பாடு என்பவற்றிற்கு அடிப்படையாக அமைகின்றன. இதன்படி இவ் ஆய்வானது தரவு சேகரிப்பு முறை மற்றும் தரவு பகுப்பாய்வு முறை என்பவற்றைக் கருத்தில் கொள்கின்றது. இதன்படி எனது ஆய்விற்கான முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல் தரவுகள், நிந்தவூர் பிரதேச காதி நீதிமன்ற அறிக்கைகள் மற்றும் நேரடி அவதானம் என்பவற்றின் மூலம் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. அதாவது ஆய்வுப் பிரதேசத்திலுள்ள விவாகரத்துக்காக காதி நீதிமன்றம் சென்ற குடும்ப நபர்களையும், விவாகரத்து பெற்ற நபர்களையும் மற்றும் காதி நீதிமன்ற நீதிபதிகளையும், ஊழியர்களையும் சந்தித்து நேர்கண்டதன் மூலம் தகவல் சேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு நிந்தவூர் பிரதேச காதி நீதிமன்றத்தில் நடைபெற்ற சில வழக்கு விசாரணைகள் நேரடியாக அவதானிக்கப்பட்டுள்ளன.

மேலும், இரண்டாம் நிலைத் தரவுகளில் ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளத் தரவுகள் மற்றும் ஒலிநாடாக்கள் போன்றவற்றின் மூலமாக பெறப்பட்ட தரவுகள் பண்பு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஆகவே இங்கு பண்பு ரீதியான பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்படுகின்றது.

## ஆய்வுப் பிரதேசம்

இவ்வாய்வானது பல்லின மக்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் நிந்தவூர் பிரதேசத்தினை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நிந்தவூர்ப் பிரதேசமானது 25-கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்வதோடு, தமிழர்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இந்த ரீதியில் நிந்தவூர் பிரதேசத்தில் உள்ள காதி நீதிமன்றத்தின் செயற்பாடுகளின் ஊடாக சமகாலத்தில் இலங்கையின் காதி நீதிமன்றம் எதிர்கொள்கின்ற சவால்களை விளங்கிக் கொள்வதற்கான அவசியம் உணரப்படுகின்றது.

## முடிவுகளும் கலந்துரையாடலும்

இவ் ஆய்வானது அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் அதேபோன்று இது தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாக பெறப்பட்ட தகவல்களைக் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தரவுகள் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

### காதி நீதிமன்றம் தொடர்பாக அறிந்துள்ளது பற்றி கேட்கப்பட்ட வினாவுக்கு பதிலளித்தவர்கள்

இங்கு காணப்படுகின்ற பெரும்பான்மையான நபர்கள் காதி நீதிமன்றம் தொடர்பாக அறிந்துள்ளமையை காணமுடிகின்றது. அரசியல், சமூக, பொருளாதார, கல்வி ரீதியாக முன்னேற்றமடைந்து வருகின்ற நிந்தவூர் பிரதேசமானது காதி நீதிமன்றம் தொடர்பான ஆரம்ப அறிவை கொண்டுள்ளமையானது இவ் ஆய்வின் முன்னேற்றத்திற்கு அடிப்படை காரணமாக அமைந்துள்ளது.

மேலும், மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் போது சில குடும்ப நபர்கள் காதி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவர்களாகவும் அல்லது வழக்கினை சமரசம் செய்வதற்காக அங்கு சென்றவர்களாகவும்

இருப்பதை அறிய முடிகின்றது. மேலும், இப்பிரதேச மக்கள் காதி நீதிமன்றம், அதன் நடைமுறை மற்றும் காதி நீதிபதி தொடர்பான தகவல்களை நன்கு அறிந்துகொண்டிருந்தார்கள்.

## பெண்களின் திருமண வயதினை பொதுச்சட்டத்தின் படி மாற்றுவது தொடர்பாக கேட்கப்பட்ட வினாவிற்கு பதிலளித்தவர்கள்

தற்போதுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருமணம் தொடர்பான விடயங்கள் 17வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அதில், 12-என நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமண வயதெல்லை இலங்கையில் ஒரு பிரச்சினையாகவும் சர்ச்சையாகவும் மாறியுள்ளது. அதிலும் பெரும்பான்மை மக்களிடையே அதிகம் பேசு பொருளாகவும் முஸ்லிம் பெண்களுடைய திருமண வயது காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆகையால் இந்த விடையமானது சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு சட்ட ரீதியாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்று பெண்ணியல்வாத அமைப்புக்களும் சர்வதேச நிறுவனங்கள் சிலவும் குற்றஞ்சாட்டி வருகின்றன. இது தொடர்பில், முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த அடிப்படையில் நிந்தவூர் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் திருமண வயதினை மாற்றுவது தொடர்பாக வினவப்பட்ட போது சில வரையறைகளுடன் மாற்றங்களை கொண்டு வருவது நல்லது என பலரால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நடைமுறையிலுள்ள முஸ்லிம் பெண்களின் திருமண வயதெல்லை 12 ஆக இருப்பது சில சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏதுவாக அமைகிறது என்று ஒரு சிலர் கருதினாலும், இதன் காரணமாக ஏற்படும் உடல், உள, சமூக ரீதியான பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு திருமண வயதில் மாற்றம் தேவை என்ற கருத்து இங்கு வலுவடைந்துள்ளது. எனவே, இது பற்றிய நடைமுறை ரீதியான சட்டம் பற்றிய தெளிவும் மார்க்க நிலைப்பாடும் இலங்கை முஸ்லிங்களுக்கு அவசியமாகின்றது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் பெண்களின் திருமண வயதெல்லையினை மாற்ற வேண்டியது அவசியமில்லை என்று கூறியவர்கள் பின்வரும் நியாயவாதத்தினை முன்வைத்தனர். அதாவது ஒரு பெண் பருவமடைந்தவுடன் திருமண வயதை அடைந்துவிடுகின்றாள், அவளுக்கு உடன் திருமணம் செய்துவிடலாம் என்று கருத்து தெரிவித்தனர். அதே பொன்று இன்னும் சில காரணங்களை வாதங்களாக முன்வைக்கின்றனர். அதாவது திருமண வயதெல்லையைத் தீர்மானிக்கும் போது அநாதைகள், பாதுகாப்பற்றோர், சுற்றுச் சூழலால் பாதிப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுவோர் ஆகிய சூழ்நிலைக் கட்டமைப்புக்குள் வாழும் பெண் பிள்ளைகளுக்கு வயதை நிர்ணயம் செய்ய முடியாது. எனவே, அவர்களது பாதுகாப்பிற்காக அவர்கள் பருவ வயதை அடைந்தவுடன் திருமணம் செய்து வைக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். எனவே பெண்கள் இவ்வாறான நிகழ்வுகளினால் ஏற்படும் பாதிப்புகளிருந்து பாதுகாக்கப்படுவர் இவ்வாறு வயதை நிர்ணயம் செய்யும் தரப்பிற்கு எதிராக தனது கருத்தினை முன்வைப்போர் (திருமண வயதெல்லையினை மாற்ற வேண்டியது அவசியமில்லை என்ற தரப்பினர்) குறிப்பிட்டார்கள் (மூலம் : நேர்காணல், 2022).

அதேபோன்று முஸ்லிம் பெண்களின் திருமண வயதெல்லையினை மாற்றுவது நல்லது என்று கூறுபவர்கள் பெரும்பான்மையினராக இருப்பதுடன் நேர்காணலின் போது இது தொடர்பாக பின்வரும் கருத்தினை பதிவு செய்தனர். 12-வயதில் ஒரு பெணை திருமணம் செய்து வைக்கும்போது அவளது கல்வி பாதிக்கப்படுகிறது. அத்துடன் அப்பெண் குடும்ப வாழ்வில் ஈடுபடும் முதிர்ச்சியற்ற நிலை ஏற்படும் இதைவிட குடும்ப வாழ்வில் புரிந்துணர்வற்ற தன்மையும் வேறு சில பிரச்சினைகளும் எழும் எனக் குறிப்பிட்டனர். மேலும், இலங்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதெல்லையை நிர்ணயிக்க வேண்டும். மற்றும் சிறுவயது திருமண பிரிவை முற்றாக நீக்க வேண்டும் என வாதிட்டனர். அவ்வாறே பெண்களின் திருமண வயதெல்லை என்பது தன்னிச்சையாகவோ அல்லது ஒரு குழுவாலோ, அல்லது தனிநபர்களாலோ தீர்மானிக்கப்பட்டு விட முடியாது என தமது கருத்துக்களை முன்வைத்தனர் (மூலம் : நேர்காணல், 2022). ஆகவே ஒரு பெண் பருவ வயதை திருமணத்திற்கான ஒரு நிபந்தனையாகக் கொள்வதனை விட சில வரையறைகளுடன் (பாதுகாப்புக் காரணங்கள்) இலங்கையின் பொதுச்சட்டத்தின் படி மாற்றுவது நல்லது என்பதுடன் தற்காலத்தில் முஸ்லிம் பெண்களுக்கு அவசியமான மாற்றமாகவும் பார்க்கப்படுகின்றது.

## காதி நீதிபதியாக தெரிவு செய்யப்படுபவரின் தகைமையை மறுசீரமைக்க விரும்புகின்றீரா என கேட்கப்பட்ட வினாவிற்கு பதிலளித்தவர்கள்

இலங்கையினை பொருத்தவரை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவே காதி நீதிபதிகளை நியமிக்கின்றது. இந்நியமனத்தைப் பெறுபவர் இஸ்லாமியத் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை வஸிய்யத் (மரண சாசனம்) போன்ற விடயங்கள் தொடர்பாக ஆழ்ந்த அறிவுடையவராக இருக்க வேண்டும். ஆனால், அவ்வறிவுசார் புலமைத்துவத்தை மையப்படுத்தி அந்நியமனம் வழங்கப்படுவதற்கு ஏற்ற எந்த ஒரு வழிமுறையும் நடைமுறையில் இல்லை. இந்நீதிபதிகளினை நியமிக்கும் போது தேசிய ரீதியான ஒரு பரீட்சையோ, அல்லது அல்-ஆலிம் பெறுபேறோ, அல்லது அரபுக் கல்லூரிகளின் பெறுபேறோ, அல்லது பல்கலைக்கழகப்பட்டமோ இந்நியமனத்துக்குறிய தகுதியாகக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக காதி நீதிபதிகளின் தகுதி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் நேர்காணலின்போது முன்வைக்கப்பட்டது (மூலம் : நேர்காணல், 2022). ஆயினும் நிந்தவூர் பிரதேசத்தில் ஆரம்பம் முதல் நியமிக்கப்பட்ட காதிகள் சிறந்த கல்வித் தகைமையினை கொண்டிருந்தமை களஆய்வின் போது புலனாகியது எடுத்துக்காட்டாக, தற்போதய தலைவர் பாடசாலையின் முன்னாள் அதிபராகவும், சமாதான நீதவானாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காதி நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்களில் ஏற்படும் திருப்தி தொடர்பாக விடையளித்தவர்கள்

காதி நீதிமன்றங்களை பொறுத்தவரையில் வழங்கப்படும் தீர்ப்புக்களில் பெண்களுக்கு மட்டும் அநீதி இடம்பெறுகின்றது எனக் கூறமுடியாது. நேர்காணலின் போது ஆண்களும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது தெரியவந்தது. அதாவது காதி நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களில் பெண் தரப்பிற்கு சார்பாக வழங்கப்பட்ட சில தீர்ப்புக்களினாலும், ஆண் தரப்பிற்கு சார்பாக வழங்கப்பட்ட சில தீர்ப்புக்களினாலும் இரண்டு தரப்புமே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே இருபாலாருக்கும் இவ்வாறு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க தீர்ப்புக்கள் சமத்துவத்தினை ஏற்படுத்தவில்லை எனக்கூறியதுடன் நேரடியாகக் கூட காதி நீதிமன்ற தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட சில ஆண்கள் அவர்களுடைய சம்பவங்களையும் மிக வருத்தத்துடன் தெரிவித்தார்கள். குறிப்பாக பராமரிப்புச் செலவு வழக்குத் தீர்ப்பின் மூலம் ஆண்களுக்கு அதிகளவான பாதிப்பு ஏற்படுவதாக கூறப்பட்டதுடன் (மூலம் : நேர்காணல், 2022). இவ்வாறான ஒரு வழக்கினை நேரடியாக அவதானிக்கவும் முடிந்தது. எனவே பெண்கள் மாத்திரம் தான் வழங்கப்படும் தீர்ப்புக்களில் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூற முடியாது. காதி நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புகள் திருப்தியளிக்காமைக்கு காதிமார்களுடைய பலவீனத்தையும் பக்கச்சார்பு நிலமையினையும் காரணம் என முன்னாள் காதி சுட்டிக்காட்டினார்.

## காதிகளின் பால்நிலை சமத்துவத்தை பேணுவதில் காதிகளாக பெண்களை நியமிப்பது தொடர்பாக விடையளித்தவர்கள்

தற்போதுள்ள காதி நீதிமன்றம், ஆண்களே காதிகளாக இருக்கக் கூடிய இடம் என்பதன் காரணமாக இங்கு பெண்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்று காதி நீதிமன்றம் தொடர்பாக முஸ்லிம் பெண்ணியல்வாதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அதேபோன்று "பெண்கள் ஆட்சித் தலைமையை ஏற்கக்கூடாது என்று இஸ்லாம் கூறுகின்றது. இது பெண்களின் உரிமையைப் பறிப்பதும் அவர்களை அவமானப்படுத்துவதுமாகும்" என்று முஸ்லிமல்லாதவர்கள் சிலரும் விமர்சனம் செய்கின்றனர். அதுமட்டுமின்றி பெண்களின் இயல்பான அச்சநிலை, பெண்களால் எதனையும் சரியாகச் செய்ய முடியாது என்ற மனநிலை மற்றும் தங்களுக்கு பதவிப் பாதுகாப்பு இன்மை போன்றன பெண்கள் காதிகளாக வருவதில் அச்ச நிலையை ஏற்படத்தியுள்ளது.

காதிகளாக பெண்களை நியமிப்பது நல்லது என குறிப்பிட்டவர்கள் பெண் முழு சமூகத்தின் கலீபா என்ற பாரிய அரசியல் தலைமைப் பொறுப்பை ஏற்பது தவிர, காதி நீதிபதி போன்ற சிறிய பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட முடியும் எனக் கூறுகின்றனர். இவ்விடத்திற்கு தகுதி இல்லாத ஓர்

ஆண் இருப்பதைவிட, தகைமை பெற்ற ஒரு பெண் அப்பணியை செவ்வனே நிறைவேற்றுவாளாக இருந்தால், அதற்கு இஸ்லாம் அங்கீகாரத்தை வழங்கும் என்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர். அத்தோடு, பெண்கள் சில தனிப்பட்ட விடயங்களைக் கூற முடியாது தவிப்பதை இல்லாமல் செய்ய முடியும் என்ற நியாயமும் முன்வைக்கப்படுவதால், காதி நீதிமன்றங்களில் பெண்களை நீதிபதிகளாக நியமிப்பது முரணான செயற்பாடு அல்ல (மூலம் : நேர்காணல், 2022). என்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர்.

அத்துடன் பெண்கள் இலங்கையில் ஆண்களுக்கான அரபுக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் அடிப்படையான பாட உள்ளடக்கங்களையே பெண்களுக்கான அரபுக் கல்லூரிகளிலும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அங்கு பெண்களை காதிகளாக உள்வாங்குவதற்கேற்ப பாடவிதான மாற்றத்தை ஏற்படுத்தலாம். இதன்மூலம் எதிர்காலத்தில் அரபுக் கல்லூரிகளிலிருந்து பட்டம்பெற்று வெளியாவோர் காதி நீதிபதிகளாக சேவை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும் குறிப்பிட்டனர் (மூலம் : நேர்காணல், 2022). இச் சட்டமூலம் கொண்டு வந்த காலத்தை விட தற்போது பல துறைசார்ந்து பெண்கள் முன்னேற்றம் கண்டுள்ளார்கள். தற்பொழுது நீதித்துறையில் பெருமளவான முஸ்லிம் பெண்கள் சட்டத்தரணிகளாக இருக்கிறார்கள். எனவே காதி நீதிமன்றம் என்பது ஒரு சாதாரண விடயம் இதிலும் நிச்சயமாக பெண்களை நீதிபதிகளாக நியமிக்க முடியும். எதிர்காலத்தில் கீழ்நிலை நீதிமன்றங்களுக்கோ மேல்நிலை நீதிமன்றங்களுக்கோ முஸ்லிம் பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட முடியும். அவ்வாறான நிலையில் தகைமையுள்ள முஸ்லிம் பெண்களை காதி நீதிபதிகளாக நியமிப்பது பொருத்தமாக அமையும் (மூலம் : நேர்காணல், 2022). எனவும் தங்களது கருத்தினை நேர்காணலின் போது தெரிவித்தனர்.

நேர்காணலின் போது பெண்களை நியமிப்பது தேவையற்றது என கூறியவர்களும் இருக்கவே செய்கின்றனர். ஒரு காதியைப் பொறுத்தவரை, வலி (பாதுகாவலர்) இல்லாத வேளையில் இன்று நடைமுறையிலுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில், "ஒரு பெண்ணுக்கு மணம் முடித்து வைக்கத் தகுதி பெற்ற பொறுப்பாளர் - வலி இல்லாத பட்சத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தை சேர்ந்த காதியே அப்பெண்ணுக்கு வலியாக இருந்து மணம் முடித்து வைப்பார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பெண்ணும் காதியாக அமரமுடியும் என வைத்துக்கொண்டால் ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் வலியாக இருக்க வேண்டிவரும். அப்படியாயின் அதையும் நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா என கேள்வி எழுப்பப்பட்டன. இதேபோல், பெண்கள் மட்டும் காதிகளாக அமர்த்தப்படும் காதி நீதிமன்றில், ஆண்கள் மணவாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்வைக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும் ஆண்கள் மூலமாக அச்சுறுத்தல் ஏற்படலாம் எனவும் தற்போதைய காதியினாலும் ஜுரியினாலும் கூறப்பட்டது (மூலம் : நேர்காணல், 2022). எனவே, பெண் காதிகளாக நியமிக்கப்பட தகுதியுடையவர்களாக்கப்படல் வேண்டும். என்பதுடன் அவர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பும் கொடுக்கப்பட வேண்டும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

## காதி நீதிமன்றத்துக்கு சென்று வழக்குத் தொடர்ந்த பின் காதி நீதிமன்றத்தினால் சம்பந்தப்பட்டவருக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக பதிலளித்தவர்கள்

காதி நீதிமன்றத்துக்கு சென்று வழக்குத் தொடர்ந்த பின் காதி நீதிமன்றத்தினால் சம்பந்தப்பட்டவருக்கு உடல், உள ரீதியான அசௌகரியங்கள் ஏற்படுகின்றது என்ற கருத்தினை அடிப்படையாகக்கொண்டு ஆய்வுப் பிரதேசத்தில் தகவல்களை சேகரித்தபோது காதி நீதிமன்றங்களை பொறுத்தவரையில் வழங்கப்படும் தீர்ப்புக்கள் பெண்களுக்கு மட்டும் அசௌகரியங்கள் இடம்பெறுகின்றது எனக் கூறமுடியாது நேர்காணலின் போது ஆண்களும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் (மூலம் : நேர்காணல், 2022). என்பது தெரியவந்தது அவ்வாறு ஏற்பட்டிருப்பின் எவ்வகையானது எனக் கோரப்பட்ட போது பெரும்பான்மையான நபர்கள் குறிப்பிடும் போது அச்சுறுத்தல் அல்லது மிரட்டுதல், மற்றும் தகாத சொற்பிரயோகம் பிரயோகிக்கப்டுப்படுகின்றது என குறிப்பிட்டனர். காதிகள் அதிகமாக கோபப்படுவதனையும் என்னால் அவதனிக்கக்கூடியதாக இருந்தது. இதில் அதிகமாக முஸ்லிம் பெண்களே ஏதோ ஒரு அடிப்படையில் சில இன்னல்களுக்கு உட்படுகின்றனர்.

## முடிவுரை

அண்மைக்காலமாக காதி நீதிமன்றத்தினை நீக்க வேண்டுமென்பதற்காக முன்வைக்கப்படும் பிரதானமான குற்றச்சாட்டு முஸ்லிம் பெண்களுக்கு பல வகையில் அநீதி இழைக்கின்ற ஒரு நிறுவன அமைப்பாக சுட்டிக்காட்டுகின்றமையாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகள் மற்றும் காதி நீதிமன்றம் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றதனால் அதனை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்தது. இதனால் தான் இவ் ஆய்வானது குறிப்பிட்ட பிரதேசத்து காதி நீதிமன்றம் தொடர்பாக முதலாம் நிலைத் தரவுகளையும், இரண்டாம் நிலைத் தரவுகளையும் சேகரித்து அவற்றினை பகுப்பாய்வுக்குறுப்படுத்தப்பட்டு காதி நீதிமன்றம் செயற்பாடுகள் சமூகத்திலுள்ள முஸ்லிம் பெண்களுக்கு மாத்திரம் அநீதி இழைக்கவில்லை. இதன் சில செயற்பாட்டினால் ஆண்களும் அநீதிற்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதும் இங்கு ஏற்கப்பட்டுள்ளது. எனவே காதி நீதிமன்றத்தின் காத்திரமான செயற்பாடுகளை இன்னும் முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறது. ஆதலால் முஸ்லிம் தனியார் சட்டத்திற்கு மற்றும் காதி நீதிமன்ற செயற்பாடுகளுக்குத் தடையாகவுள்ள ஏற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு இலங்கை காதி நீதிமன்றத்தில் முஸ்லிம் பெண்களினுடைய ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். ஆகவே, இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையானது சிறந்தது என்ற காரணத்தினால், பொதுச் சட்டம், நடைமுறைச்சட்டம் போன்றவற்றின் பல விடயங்களையும் தேவைக்கேற்ற வகையில் அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது. ஆகவே காதி நீதிமன்றம் முற்றாக நீக்கப்படுவதனை விட அதன் மீது முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றினை களைவதன் மூலமாக முஸ்லிம் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை தடுக்க முடியும்.

## References


Jazeel, M.I.M., Fowzul, M.B. (2018), Qualifications of Quazi in Sri Lanka: A Field Study from Islamic Perspective, Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 1(1), 32 - 51.

Mark Coory, L.J. (2003) An introduction to the legal system of sri lanka, Stamford Lake, Colombo, Srilanka

Mazahir, S.M.M., Helfan, M.L.M., Rakshana Farvin, M.U., & Shihana M.S.F. (2017) Ilankai Muslim Taniyar Cattam Kuritta Karuttu Nilai Ilankai Tenkilakkup Palkalaikalaka Muslim Manavarkalai Maiyappatuttiya Ayvu, E-Proceeding (Vol.I), South Eastern University Arts Research Session, 368-373.



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of interest

The Author’s have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author(s) 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

T. Mohamed Mufas, C. Sivanayagam, Challenges faced by quazi court and its resolutions in Contemporary Sri Lanka, Indian Journal of Multilingual Research and Development, Vol 4, Iss 2 (2023) 26-32. DOI: https://doi.org/10.54392/ijmrd2324